*சி.சி.231/2012 தேதி 22.12.2020 அ.சா.10 திரு.வெங்கடேசன் த/பெ.காலம் முதல் விசாரணை தொடர்ச்சி*

*தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரி தான் ஏழுமலை. அவர் தான் வண்டியை ஓட்டினார்.*

*குறுக்கு விசாரணை*

*விபத்து நடந்த இடம் ஏரிக்கரை என்றால் ஏரிக்கரைக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை, ஏரிக்கரைக்கு தாண்டியுள்ளது. அந்த சாலை வளைவான சாலை, அந்த சாலை மேடுபள்ளம் குண்டும்குழியுமாக உள்ள சாலை என்றால் இருக்கலாம் நான் கவனிக்கவில்லை. வண்டி 15 பேர் தான் செல்லக்கூடிய கெப்பாசிட்டி உள்ள வண்டி என்றால் சரிதான். அன்றைய தினம் ஆட்டோ போகாததால் நிறைய பேர் 25 பேர் நியாநானா என்று அந்த வண்டியில் ஏறினோம் என்றால் சரிதான். நான் அந்த வண்டியில் பின்னாடி ஏறினேனா என்றால் முன்சீட்டில் தான் உட்கார்ந்திருந்தேன். வேனில் டிரைவர் சீட்டிற்கு பின்னாடி தடுப்பு ஒன்று இருந்ததா என்றால் நான் கவனிக்கவில்லை. நான் முன்னாடி உட்கார்ந்திருந்தேன் எந்த இடத்தில் உட்கார்ந்து இருந்தேன் என்று தெரியாது. அந்த வண்டியில் எத்தனை மீட்டர் இருந்தது என்று பார்த்தேனா என்றால் இல்லை. நான் 80 கி.மீ வேகத்தில் வண்டி சென்றதாக மீட்டரை பார்க்காமல் எவ்வாறு கூறினேன் என்றால் 80 கி.மீ என்று நான் சொல்லவில்லை, அதிகவேகமாக தான் என்று நான் சொன்னேன்.*